بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹு'ல்லாஹு'த் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 15/12/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜு'முஆ பேருரையின் சுருக்கம்**

**✪ உஹு'து போரின் நிலைமைகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய குறிப்பு**
**✪ பாலஸ்தீனத்து அப்பாவிகளுக்காக துஆக்களுக்கான தொடர் வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ـ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக உஹு'து போர் பற்றி கூறப்பட்டு வந்தது. அதன் மேற்கொண்ட விவரம் இவ்வாறாகும்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹு'து களத்தில் முகாமிட்ட போது முஸ்லிம்களின் படையின் பின்புறம் ஒரு பக்கத்தில் உஹு'து மலை இருந்தது. அதன் காரணமாக, முஸ்லிம் படை பின்புற தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக ஆகி விட்டிருந்தது. ஆயினும், ஒருபுறம் மலைக் குன்று இருந்தது. இந்தப் பகுதி, எதிரி அதன் வழியாக தாக்குதல் தொடுப்பதற்கு ஏதுவானதாக இருந்தது.

எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த இக்கட்டையும் ஆபத்தையும் உணர்ந்த வண்ணம் வில்வீரர்களான 50 சஹாபா பெருமக்களைக் கொண்ட ஒரு படைக் குழுவுக்கு அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களை அமீராக நியமித்து இந்தக் குன்றின் மீது நியமித்தார்கள். ஹு'ஸூர் (ஸல்) அவர்கள் அந்த வில்வீரர்களுக்கு இவ்வாறு வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள்: 'நீங்கள் பறவைகள் எங்களைக் கொத்துவதாகக் கண்டாலும் சரி அல்லது நாங்கள் எதிரிப்படையைத் தோற்கடித்து, வீழ்த்தி விட்டதாகக் கண்டாலும் சரி, பிறகும் கூட, நான் உங்களுக்கு செய்தி அனுப்பும் வரை உங்களுடைய இந்த இடத்தை விட்டு ஒருபோதும் விலகக் கூடாது.'

வாழ்க்கை வரலாறு எழுதுபவர் ஒருவர் எழுதுகிறார்:- ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'எதிரிகள் எங்களுக்குப் பின்னால் இருந்து தாக்குதல் தொடுத்து விடாதிருக்கும் வண்ணம், நீங்கள் எதிரிகளின் குதிரைப் படைகளை எங்களை விட்டும் விலக்கி வைத்திருங்கள். ஐயமின்றி, நீங்கள் உங்கள் இடத்தில் நிலைத்து நிற்கும் வரை நாம் ஆதிக்கம் பெற்றிருப்போம். பிறகு, கூறினார்கள்: அல்லாஹ்வே! நான் உன்னை அவர்களுக்கு சாட்சியாக ஆக்குகிறேன்.

ஓர் எழுத்தாளர் இவ்வாறு எழுதியுள்ளார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்தப் போர் உத்தி எந்த அளவுக்கு சிறந்ததாகவும் உன்னதமானதாகவும் இருந்தது என்றால், அதன் மூலம் ஹுஸூர் (ஸல்) அவர்களின் படையை வழிநடத்தும் அசாதாரணமான திறமை பற்றி தெரிய வருகிறது. ஒரு படைத்தளபதி எவ்வளவு புத்திக்கூர்மை கொண்டவராக இருந்தாலும் சரி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட மெல்லிய, உன்னதமான, நுட்பம் நிறைந்த போர் திட்டத்தை ஆயத்தப்படுத்த முடியாது.

வில் வீரர்களின் படைக் குழுவை உஹுது மலையில் நியமித்த பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிம்மதியடைந்து, படை வரிசைகளை ஆயத்தப்படுத்தத் துவங்கினார்கள். எண்ணிக்கை மற்றும் போர்த் தளவாடங்கள் ரீதியாகப் பார்க்கும் போது, வெளிப்படையில் முஸ்லிம்களின் நிலை பலவீனமாக இருந்தது. இணைவைப்பாளர்களின் படை பத்து அணிகளைக் கொண்டிருந்தது. இஸ்லாமிய படையோ இரண்டு அணிகளை (மட்டுமே) கொண்டிருந்தது. மேலும், 50 வில்வீரர்கள் குன்றின் மீது இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அழுது மன்றாடி, பணிவுடனும் தேவையுடையவராகவும் இறைவனுக்கு முன் துஆக்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹுது நாளன்று இவ்வாறு துஆ செய்து கொண்டிருந்தார்கள்: அல்லாஹ்வே! நீ நாடினால் பூமியில் உன்னை எவரும் வணங்க மாட்டார். அதாவது, நீ உதவி புரியவில்லை என்றால், இந்த நிலை தான் ஏற்படும். பத்ர் யுத்தம் அன்றும் இந்த துஆவையே செய்ததாக சில அறிவிப்புகளில் வருகிறது. வல்லாஹு அஃலம் (எல்லாரையும் விட அல்லாஹ்வே நன்கறிவான்)

ஹஸ்ரத் சஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: வாருங்கள்! நாம் இருவரும் சேர்ந்து துஆ கேட்போம். ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் இவ்வாறு துஆ கேட்டார்கள்: ‘என் இறைவா! நாளை நாங்கள் எதிரியுடன் மோதும் போது, கடுமையான ஆற்றல் பெற்ற போர் வீரனை நான் எதிர்கொள்ள வேண்டும். மேலும், நான் அவனைக் கொன்று விட வேண்டும்.’

பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் இவ்வாறு துஆ கேட்டார்கள்: ‘என் இறைவா! நாளை நான் கடுமையான ஆற்றல் பெற்ற ஒருவனை எதிர்கொள்ள வேண்டும். அவன் என்னுடைய மூக்கையும் காதுகளையும் அறுத்து விட வேண்டும். மேலும், உன்னை நான் சந்திக்கும் போது நான் உன்னிடம், ‘உன்னுடைய மற்றும் உன் தூதர் (ஸல்) அவர்களுடைய விருப்பத்தைப் பெறுவதில் எனக்கு இந்த நிலை ஏற்பட்டது’ என்று நான் கூற வேண்டும். பிறகு, போரில் அவரவர் செய்த துஆவுக்கு ஏற்பவே இருவருக்கும் நடந்தது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன்னபிய்யீனில் எழுதுகிறார்கள்: தங்களது படையின் பின்புறத்தை முழுமையாக பாதுகாத்துக் கொண்ட பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)

அவர்கள் இஸ்லாமிய படையை அணிவகுக்கச் செய்தார்கள். பிறகு, பல்வேறு படைக்குழுக்களுக்கு எனத் தனித்தனியாகத் தலைவர்களை நியமித்தார்கள்.

அந்த சந்தர்ப்பத்தில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு குறைஷிய படையின் கொடி தல்ஹா பின் அபீ தல்ஹாவின் கையில் இருப்பதாகத் தகவல் கொடுக்கப்பட்டது. குறைஷிய வம்சத்தில் தலை சிறந்த நபராக அறியப்பட்ட குஸா பின் கிலாப் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஏற்பாட்டின் கீழ், போர்களில் குறைஷியர்களின் கொடியை ஏந்துவதற்கான உரிமை கொண்டிருந்த குடும்பத்தைச் சேர்ந்தவனாக இந்த தல்ஹா இருந்தான். இதை அறிந்து கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாம் சமுதாய ரீதியிலான நன்றியுணர்வை வெளிப்படுத்துவதற்கு அதிகம் உரிமையுடையவர்களாவோம்.

எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடமிருந்து முஹாஜிர்களின் கொடியை வாங்கி முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அவர் தல்ஹா பின் அபீ தல்ஹாவுக்கு உறவுள்ள அதே குடும்பத்தின் ஒரு நபராக இருந்தார். மறுபுறம் அபூ சுஃப்யான் படைத் தலைவராக இருந்தார். பெண்கள் படைக்குப் பின்னால் முரசுகளைக் கொட்டி கொட்டி, கவிதைகளைப் பாடி பாடி ஆண்களுக்கு ஊக்கமூட்டி வந்தனர்.

அபூ ஆமிர் போரைத் துவக்கினான். இவன் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவனாக இருந்தான். மதீனாவில் வாழ்பவனாக இருந்தான். அவன் ராஹிப் என்று அழைக்கப்பட்டு வந்தான். இவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான காழ்ப்புணர்ச்சி மற்றும் பொறாமையில் ஓடி மக்காவுக்குச் சென்று விட்டிருந்தான். அவன், 'நான் போர்க்களத்துக்கு செல்லும் போது எனது கோத்திரத்து மக்கள் என்னுடன் வந்து இணைந்து கொள்வார்கள்' என்று தவறாகக் கருதிக் கொண்டிருந்தான்.

அந்த நம்பிக்கையில் அவன், 'அவ்ஸ் கோத்திரத்து படைகளே! நான் அபூ ஆமிர் ஆவேன்' என்று உரத்த குரலில் கத்தினான். அதற்கு அன்ஸாரிகள், 'தீயவனே! உனது கண் குளிராமல் போகட்டுமாக!' என்று கூறி' அவர்கள் மீது கற்களை எறிந்தார்கள். ஆகவே, அவன் தன்னுடைய கூட்டாளிகளுடன் சேர்ந்து ஓடி விட்டான்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதுகிறார்கள்: அபூ ஆமிரும் அவனுடைய கூட்டாளிகளும் ஓடிய காட்சியைப் பார்த்து குறைஷியர்களின் கொடியை ஏந்தியவனான தல்ஹா பின் அபீ தல்ஹா மிகவும் உத்வேகத்துடன் முன்னோக்கிச் சென்றான். பெரும் ஆணவத்துடன் ஒற்றையாகப் போரிட அழைத்தான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் முன்னால் சென்றார்கள். இரண்டு மூன்று வீச்சில் தல்ஹா பின் அபீ தல்ஹாவை வெட்டி வீழ்த்தி விட்டார்கள்.

இதற்குப் பிறகு, குறைஷியர்கள் தரப்பிலிருந்து ஏறத்தாழ 9 பேர் ஒருவர் பின் ஒருவர் எனத் தமது சமுதாயத்தின் கொடியைத் தங்களுடைய கைகளில் ஏந்தினர். ஆனால், அவர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக

முஸ்லிம்களின் கைகளால் கொல்லப்பட்டார்கள். சுருக்கமாக, குறைஷியர்களின் கொடியை ஏந்துபவர்கள் கொல்லப்பட்ட பிறகு, இரு படைகளும் ஒன்று மற்றொன்றுடன் கடுமையாகப் போரிட ஆரம்பித்து விட்டன. மும்முரமாக போர் நடைபெற்றது. ஒரு நேரம் வரை இரு புறமிருந்தும் கொன்று குவித்தல் தொடர்ந்து வந்தது. கடைசியில் மெது மெதுவாக இஸ்லாமிய படைக்கு முன்னால் குறைஷிய படையின் பாதங்கள் ஆட்டங்காண ஆரம்பித்தன.

பிரசித்தி பெற்ற ஆங்கிலயே வரலாற்றாசிரியர் சர் வில்லியம் முயர் எழுதுகிறார்: முஸ்லிம்களின் பயங்கரமான தாக்குதலுக்கு முன்னால் மக்கத்துப் படையின் கால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டன. முஸ்லிம்கள் தாம் பத்ர் யுத்தத்தின் போது காட்டிய அதே வீரத்தையும், துணிவையும்; மரணத்திற்கும், ஆபத்திற்கும் அதே அஞ்சாமையையும் உஹுது களத்திலும் காட்டினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூத் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்: போர் நடந்தது. அல்லாஹ்வின் உதவி, ஆதரவால் சிறிது நேரத்திலேயே 650 முஸ்லிம்களுக்கு எதிரில், அனுபவசாலிகளாக இருந்த 3000 மக்கத்துப் போர் வீரர்கள் பின்னங்கால் பிடரியில் அடிக்க ஓடினர்.

இந்த சந்தர்ப்பத்தில் குன்றின் மீதிருந்த முஸ்லிம்கள், 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்ன கூறியிருந்தார்களோ அதை வலியுறுத்திக் கூறுவதற்காக மட்டுமே கூறியிருந்தார்கள்; இல்லையென்றால், எதிரிகள் ஓடிய பிறகும் இங்கேயே நின்று கொண்டிருங்கள் என்ற பொருளில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியிருக்க மாட்டார்கள்' எனக் கருதினார்கள். எனவே, அவர்கள் குன்றை விட்டு விட்டு போர்க்களத்தில் குதித்தார்கள். இந்தக் கட்டுப்படாமையின் காரணமாக, பின்னர் ஏற்பட்ட விளைவுகள் பற்றியும் இனி வரும் காலத்தில் கூறப்படும். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹுது போர் அன்று ஒரு வாளை ஏந்தினார்கள். மேலும், 'யார் என்னிடமிருந்து இதைப் பெற்றுக் கொள்வார்?' என்று வினவினார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள், 'இதற்கான உரிமை என்ன?' என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'இதைக் கொண்டு எந்தவொரு முஸ்லிமையும் கொல்லக்கூடாது. எந்தவொரு நிராகரிப்பாளரைக் கண்டும் ஓடக் கூடாது; நின்று போரிட வேண்டும்' என்று கூறினார்கள்.

அவர்கள் வாளைப் பெற்றார்கள். இணைவைப்பாளர்களின் தலைகளைக் கொய்து விட்டார்கள். மேலும், அதற்கான உரிமையை நிறைவேற்றி விட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாளைப் பெற வேண்டும் என்று எல்லாரையும் விட அதிகம் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் ஆவலுடன் இருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த வாளை ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்களுக்கு வழங்கியதும், (ஸுபைர்) அவர்கள் அபூ துஜானா அந்த வாளை வைத்து என்ன செய்கிறார் என்று நான் பார்ப்பேன் என்று உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

ஆக, ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அபூ துஜானா (ரலி) அவர்கள் வாளை எடுத்துக் கொண்டு இணைவைப்பாளர்களின் படையில் நுழைந்து மரணங்களாக சிதறடிக்கச் செய்தவாறு, குறைஷியர்களின் பெண்கள் நின்று கொண்டிருந்த படையின் மறுமுனைக்கு சென்று விட்டார்கள். அபூ சுஃப்யானின் மனைவி ஹிந்த், அபூ துஜானா (ரலி) அவர்களுக்கு முன்னால் வந்தார். மிகவும் உரத்த குரலில் கத்தி கத்தி தங்களுடைய ஆண்களை உதவிக்கழைத்தார். ஆனால், ஒருவரும் அவருக்கு உதவ வரவில்லை. அபூ துஜானா அவர்கள் (ஓங்கிய) தமது வாளை இறக்கி விட்டார்கள். மேலும், அங்கிருந்து விலகி வந்து விட்டார்கள்.

பிறகு, ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் வினவிய போது கூறினார்கள்: ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாளை ஒரு பெண்ணின் மீது, அதுவும் எந்த ஆண் பாதுகாவலரும் அல்லாத ஒரு பெண்ணின் மீது வீச எனக்கு மனது வரவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எப்பொழுதும் பெண்களுக்கு மதிப்பளிக்குமாறு போதனை வழங்கி வந்தார்கள். அதன் காரணமாக, நிராகரிப்பாளர்களின் பெண்கள் அதிகம் துணிச்சலுடன் முஸ்லிம்களுக்கு இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்து வந்தார்கள். ஆனால், பிறகும்கூட முஸ்லிம்கள் இந்த விஷயங்களைப் பொறுத்துக் கொண்டே சென்றார்கள். ஆக, இதுதான் இஸ்லாமிய போர்களின் அடிப்படை விதிகள். மற்றவை இனி எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* பாலஸ்தீனத்து மக்களுக்காகவும் துஆக்கள் செய்து கொண்டே இருங்கள். நாளுக்கு நாள் அநீதி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. பெருகிக் கொண்டே செல்கிறது என்றே சொல்ல வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் இப்பொழுது அநீதியிழைப்பவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக! அப்பாவிகளான பாலஸ்தீனர்களுக்கும் எளிமைகளை ஏற்படுத்துவானாக! முஸ்லிம் நாடுகளுக்கும் அவர்களுடைய குரல்கள் ஒன்றாகும் பொருட்டு அறிவையும் புரிதலையும் வழங்குவானாக! அவர்கள் முஸ்லிம் சகோதரர்களுக்காக, அவர்களுடைய உரிமைகளை செலுத்துவதற்கு முயற்சி செய்பவர்களாக இருப்பார்களாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**